# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௩௰ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௫ சய—ஆனி 1954—ஜூன் | மலர் ௩


## தமிழாசிரியர் மாநாடு.

மாநாடென்பது தமிழ் நாட்டில் சில பல ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் புதுமைகளில் ஒன்று. மக்கள் நலனுக்காக மக்களால் நிகழ்த்தப் பெறும் அரசாங்கத்தில் மக்கள் கூடித் தங்கள் குறைகளைத் தெரிவித்துக்கொள்ளுவதே மாநாடுகளின் தலையாய நோக்கமாகும். வாழ்வில் குறையுடையாரும் கூடுகின்றனர்; குறைகளை அறிவிக்கின்றனர். ஆனால், வாழ்வில் குறையில்லாதவரும் பல மக்களின் குறைகளுக்கு மூலமாகத் தங்கள் வாழ்வை அமைத்துக்கொண்டிருப்பவர்களும் கூடக் கூடிக் குறையுடையார்போல நடிக்கின்றனர். இவர்கட்கு நல்ல விளம்பரமும் செய்தித் தாள்களில் கிடைக்கின்றது. "பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் பொய்யும் மெய்யாய்த்தோன்றும்" என்னும் முதுமொழியின் உண்மையினை இத்தகையார் மாநாடுகளில் இன்றுங் காணலாம். இன்னொரு சாராருண்டு. அவர்கள் வாழ்வில் நிறைவைக் காணமுடியாது எல்லாத் துறைகளிலும் குறை பல மலிந்தவர்கள். அவர்கள் கூடுவதுமில்லை. அறிவிப்பதுமில்லை. இவ்வாறு மாநாட்டைப் பொறுத்த அளவில் முத்திறமாக நம் நாட்டுமக்களைப் பகுக்கலாம்.

அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழாசிரியர் மாநாடு நிகழ்ந்தது. தமிழ் நாட்டுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர் குழுவில் மிகவும் பலவான குறைகளைத் தமிழாசிரியர் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகத் துய்த்தே வந்துள்ளனர். அந்நிய ஆட்சியும், அந்நிய மொழியின் ஆதிக்கமும் தமிழையும், தமிழாசிரியர்களையும் மிகவும் குறைப்படுத்தி வந்துள்ளன. நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட இக் குறைகளெல்லாம் ஓரிரண்டு மாநாடு கூட்டி முடிவுகளை நிறைவேற்றி அரசியலாருக்கு அனுப்பிவிடுவதால் போக்க முடியுமென்று நாம் எண்ணவில்லை. இவ்வாறு எண்ணுவதற்கு நல்ல காரணங்கள் உண்டு. ஏனைய மொழியாசிரியர் குறைகள் அவர்களையும் அவர்கள் கற்பிக்கும் மொழியையும் பற்றியதாக இருக்கும். ஆனால் தமிழாசிரியர் குறைகள் தம்மளவிலும், தாம் கற்பிக்கும்

மொழியளவிலும் நிற்பதில்லை. தமிழ் நாடு, அதன்கண் வாழும் மக்கள் ஆகிய எல்லாவற்றின் நன்மை தீமைகளேயும் பொறுத்துள்ளது. ஆகவே தமிழாசிரியர் குறைகள் தமிழ் நாட்டையும் சார்ந்திருப்பது வெளிப்படை. தமிழாசிரியர் குறைகளெல்லாம் தீர்ந்தது என்றால் தமிழ் நாட்டின் குறைகளே தீர்ந்தது என்பது பொருள். இவ்வாறிருந்தாலும், இதுகாறும் மாநாடு கூட்டித் தங்கள் குறைகளை எடுத்துக்காட்டாத தமிழாசிரியர்கள் இப்போதாவது எடுத்துக்காட்ட வந்தது தமிழ் நாட்டுக்கே நல்ல காலமாகும்.

நாவலர், சோமசுந்தரபாரதி யவர்களின் சீரிய தலைமையில், சிறந்த பல அறிஞர்களின் விரிவுரைகளுடன் சிறப்புற நிகழ்ந்தமை போற்றற்குரியதாம். திருக்குறள் உரை வளங்களைப் பெரு முயற்சியோடும், நுண்மாண் நுழைபுலம் விளங்க விளக்கவுரை வரைந்தும் தொகுத்தும் தமிழ் நாட்டுக்களித்த திருமிகு, தண்டபாணி தேசிகரவர்களைப் பொன்னுடை போர்த்திப் பாராட்டியது தமிழாசிரியர்கட்கே சிறப்பளிப்பதாகும். தற்காலச் சூழ்நிலையில் தமிழ் மொழி பற்றியும் தமிழாசிரியர் பற்றியும், அரசியலாரும், சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் செய்யவேண்டிய செயன் முறைகளைப் பல முடிவுகளாகக் கொண்டுவந்து நிறைவேற்றியுள்ளனர். அவைகளுள்ளும் சிறந்த இன்றியமையாத முடிவுகளை உடன் நிறைவேற்றிவைக்க முதலமைச்சர், கல்வியமைச்சர் ஆகியோரிடம் விளக்கிக் கூறக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டதை அறிகின்றோம். தமிழாசிரியரெல்லாம் நாத்திகர் என்ற பொதுப் பேச்சு சரியல்லவெனப்பேரறிஞர், திருமிகு. A. C. செட்டியாரவர்கள் விளக்கிக் கூறியது மிகவும் பொருத்தமாக இருந்தது. அதிலும் தமிழாசிரியரைப்பற்றிப் பேசும்போதெல்லாம் நாத்திகரெனக் கூறிவந்த அமைச்சர் திருமிகு. சுப்பரமணியம் அவர்கள் முன்னிலையில் கூறியது மிகவும் பொருத்தமாக இருந்தது.

தமிழாசிரியர்கள், பிற கலைகளைப் பிற மொழிகள் மூலம் நன்கறிந்த அறிஞர்கள், அரசியலார் யாவரும் கூடித் தமிழ்மொழியினை வாழ்வுத் துறைகள் யாவற்றுக்கும் பயன்படும்படிச் செய்ய வேண்டும். இத்துறையில் தனிப்பட்டோர் முயற்சி நல்ல பயனை அளிக்காது. தமிழாசிரியர் மட்டும் முயன்றாலும் வெற்றி காண முடியாது. எல்லா அறிஞர்களும் துறைதோறும் செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்யப்பாடுபடவேண்டும். அத்தகைய நன் முயற்சியில் வெற்றியடையும் காலமே தமிழ்நாட்டின் நல்ல காலமாக இருக்கமுடியும். இச் சிறந்த முயற்சியில் யாவரும் முயல்வோமாக.

# சென்னைமாநிலத் தமிழாசிரியர்

## இரண்டாவது மாநாட்டு நிகழ்ச்சிகள்.

தொகுத்தவர்
புலவர், ஏகாம்பரநாதர்,
வீரராகவ உயர்நிலைப் பள்ளி, தஞ்சை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு மண்டபத்தில் 10—7—54 மாலை மாநாட்டினை ஒட்டிச் சில நிகழ்ச்சிகளும் 11—7—54ல் மாநாடும் நடைபெற்றன. 10—7—54ல் திரு. ச. தண்டபாணித்தேசிகர் அவர்கள் திருக்குறள் உரை வளம் எழுதினமை குறித்துப் பாராட்டு விழா நடைபெற்றது. அதுபோது தென்னார்க்காடு மாவட்டத் தண்டல் நாயகம் திரு. A. உத்தண்டராம பிள்ளை (I. A. S.) அவர்கள் தலைமையேற்றுப் பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்கள். ஒவ்வொரு புலவரும் இம் முறையில் தமிழ் ஆக்கம் கருதி வேலை செய்தல் வேண்டுமென்றும், அவ் வேலை பயன்படுமாறு தருமபுர ஆதீனம் மேற்கொண்டு திருக்குறள் உரை வளத்தினை வெளியிட்டதுபோலப் பிற ஆதீனங்களும் கல்விக் கழகங்களும், செல்வர்களும் முன்வரல் வேண்டுமெனவும் கூறினர். தென்னார்க்காடு மாவட்டக் கல்வித் துறைத் தலைவர், திரு. V. ஆநந்தராஜ் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. கோ. சுப்பிரமணியப் பிள்ளை அவங்களும், பன்மொழிப் புலவர், திரு. டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் முறையே தேசிகரவர்களைப் பாராட்டிப் பேசினர். அதனையடுத்து 'மறைமலையடிகள்' படத்தைப் பன்மொழிப்புலவர், ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களும், 'கால்டுவெல்' படத்தை டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்களும், 'சுந்தரம் பிள்ளை' படத்தை ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்களும் முறையே திறந்து வைத்து அன்னாரின் அரிய தமிழ்த்தொண்டுகளை விளக்கினர்.

11—7—54ல் நாவலர், திரு. ச. சோமசுந்தரப் பாரதியார் அவர்கள் தலைமையில் மாநாடு தொடங்கியது. மாநில மாவட்டங்கள் யாவற்றினி லிருந்தும் 300 உறுப்பினர்கட்கு மேல் வந்திருந்தனர், தமிழன்பர்களின் எண், மண்டபத்தினும் விஞ்சி வெளிநடைகளிலும் எட்டியது. வரவேற்புக் கழகத் தலைவர், டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில் தமிழாசிரியர்களின் நிலமை தொடக்கப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, கல்லூரிகளில் ஊதியத்தானும், பிறமதிப்புக்களானும் மிகவும் உயர்த்தப்படல் வேண்டும். தமிழ் முதல் மொழியாகியும், மொழி

யாசிரியர்கள் பெறவேண்டிய உரிமைகள் பெறுமல் இருப்பது வருந்தத் தக்கது. தமிழாசிரியர்கள் அனைவரும் நாத்திகர் என்று கூறப்படும் பழி பொருந்தாது. திருக்குறள், தேவாரம், திருவாய்மொழி முதலிய நூல் களைக் கற்பிப்பவர் நாத்திகராக இருத்தல் சாலாது. தமிழின் பற்ருல் தமிழையே தெய்வமாகக்கொண்டுள்ள சிலரின் உணர்ச்சி வேகத்தைத் தவருகக் கருதித் திரித்துப் பேசும் சிலரின் கூற்றன்றி உண்மையல்ல என்றும் தமிழாசிரியர்கள் ஆங்காங்குகிளைக் கழகங்கள் ஏற்படுத்திக்கொண்டு மொழியாக்கம் கருதியும், நமது உயர் தகுதி கருதியும் ஒன்றுபட்டு செயல் புரியவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர். அமைச்சர் திரு. C சுப்பிர மணியம் அவர்கள் மாநாட்டினைத் திறந்துவைத்துத் தமிழ்மொழி உயர்நிலைப் பள்ளிகளில் பிற பாடங்களை யெல்லாம் போதிக்கும் பொது மொழியாக அமைக்கப்பட்டிருத்தலே தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு ஏற்படுத்திய வழி யென்றும், கடவுள் கொள்கையின் ஆராய்ச்சி பள்ளிக்கூடத்திற்கு வெளியே ஆராயவேண்டிய ஒரு செய்தி யென்றும், தமிழாசிரியர்களின் ஊதியம், நிலஉயர்வுபற்றி அரசியலார் கருதிக் கொண்டிருக்கின்றனரென் றும் கூறினர்கள்.

திரு. S. S. பாரதியார் அவர்கள் தலைமையுரையில் அகத்தியரும் தமிழைக்கற்றே புகழ்பெற்ருர் என்றும் தமிழ் என்றும் அழியாதது என் றும் "என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்டான், என்று கம்பரே கூறியுள்ளார் என்றும், வடமொழி ஒருகாலத்தும் பேச்சு வழக்கில் இருந்ததில்லை யென்றும், அண்ணமலைப் பல்கலைக் கழகம் தமிழ் மொழிக்கே யுரிய கலைக்கழகமாக அமையவேண்டுமென்றும் கூறினர்.

இராஜா சர் அண்ணமலைச் செட்டியார் படத்தை வித்துவான் லெப. கரு, இராமநாதச் செட்டியார் அவர்கள் திறந்துவைத்துச் செட்டியார் அவர்கள் பழங்காலப் புரவலர்கள் போன்றவர் என்றும் தக்க புலவர்கள் அவரின் செயல்களைப் பாடி இலக்கியமாக்கப்படாதிருத்தலே குறையென்றும் கூறினர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் படத்தை டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் திறந்துவைத்து தமிழ் மொழிக்கு இவரே உரைநடைச் செல்வர் என்றும், தமிழ்மொழி யாட்சி மொழி யாதலை ஒவ்வொரு நாளும் கனவாய்க்கண்டு நனவாய்ப் பேசி வந்தவர் என்றும், தான் இறந்தால் எனக்காக எனது தாயத்தார் ஒருவர் கொள்ளிவைத்துக் கருமஞ் செய்யக் கூடாது, தமிழர் யாவரும் கொள்ளி வைக்கும் உரிமையை யான் பெற்ருல் தமிழரிடம் நான் கொண்டிருந்த பற்றுக்கு அறிகுறியாக உலகு கருதும் என்றும் அவர் கூறியதாகக் கூறி

(93-ஆம் பக்கம் பார்க்க)

# அமைதி?

வித்துவான் ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி தஞ்சை.

## கவிதை நாடகம்.

(முற்றொடர்ச்சி, துணர் ௩௰, மலர் ௨, பக்கம் 60)

பொன்னி :— நாதனின்றேல் மங்கையர்க்குச் செல்வம் பேயாம்
நலிந்தனை வதைப்பதுமக் கழகுதானே?
காதலனின் மிக்கதொரு உறவும் உண்டோ?
கடலன்ன செல்வத்தால் பயனும் உண்டோ?
மாதருக்கே அமைந்தகடன் மறவேன் என்றன்
மணவாளா! எனைவெறுக்க வேண்டாம்; தங்கள்
பாதமலர் பூசனைசெய் துய்வேன் தங்கள்
பக்கத்தே தொண்டுசெய்யும் வரத்தைமட்டும்
வேதனையால் வாடுமெனக் கருளல் வேண்டும்!
விதித்தபணி செய்வதெனக் கமைதியாகும்

நன்மாறன் :— வாதுசெய்து பயனில்லை, வனத்திற் சென்று
வலியதவம் செய்தமைதி பெறுவேன் வாழ்க

பொன்னி :— யானும்உடன் வந்துமக்கே அடிமை செய்வேன்
ஞாலமதில் உம்மையன்றி எனக்கேன் வாழ்வு?

நன்மாறன் :— கானமதில் கொடியபல விலங்கி ருக்கும்
காரிகைநீ வருவதற்குத் தகுதியில்லை

பொன்னி :— ஈனஉடல் வாழ்வதிலும் இறத்தல் மேலாம்

நன்மாறன் :— எனைமறுத்துப் பேசிவதை புரிதல் நன்றோ?
தேனுடனே பாலமுதம் சிந்தையின்றேல்
சிறந்திடுமோ? தடுக்காதே செல்லுகின்றேன்.

பொன்னி :— அந்தோ! என் ஆருயிரைப் பிரிந்தேன், ஐயோ!
அலைகடலே எனைவிழுங்கு; தீயில் மூழ்கி

வெந்தாலும் உடல்குளிரும் மலையிடிந்து
விழுந்ததென்றன் வேதனையைப் போக்கிடாதோ
கொந்தாக யான்செய்த வினைகள் என்னைக்
கொலைபுரிய மாட்டாவோ? பாவி இன்னும்
சிந்தாமல் இவ்வுயிரைத் தாங்குகின்றேன்
சென்றிடுவேன் அவர்மடியில் உயிரைச் சாய்ப்பேன்

[அப்பொழுது நண்பன் வந்து தடுத்து ஆறுதல் கூறுகிறான்]

மதிவாணன் :-என்னஇது! தங்காய்ஏன் அழுகை? உன்னை
இந்தநிலைக் காக்கியதார்?

பொன்னி :- ............ ............................. ஐயோ! அண்ணா!
பன்னறிய துன்பமதில் என்னை ஆழ்த்திப்
பைங்கானில் அமைதியினைப் பருகச் சென்றார்.

மதிவாணன் :-முன்னறிவே இல்லாத முட்டாள்; உன்னை
முழுதுமறி யாக்குறைதான், அமைதி காணத்
துன்னறிய கானகத்திற் சென்றான் என்னே!
துணைப்பிரியும் கல்நெஞ்சன்! தூய நங்காய்!
அவனறிவை மாற்றியொரு நொடிக்குள்ளே யான்
அழைத்துவரு வேனினிமேல் துன்பம் வேண்டாம்
தவமுனியாய் அமைதிபெறச் சென்றான் பாவம்
தமிழறிஞர் மூதுரையை மறந்தான் மூடன்.

[காட்டில் தவவேடத்துடன் உட்கார்ந்து நன்மாறன் தவஞ்செய்கிறான் அப்பொழுது பலவகையான விலங்குகளெல்லாம் அவன் மனத்தைக் கலைக்கின்றன]

நன்மாறன் :- சிவனேஎன் சிந்தையினை அடக்கி நிற்கும்
திறமருள்க சிவசிவஓம் ஓம்சிவோகம்

[ ]

அவமேஎன் தவம்பலியா வகையில் பாழும்
அருவிலங்கும் பறவைகளும் கலைக்கும் சீச்சி

[கண்ணை விழிக்கிறான் பழுத்த தவமுனிவர் ஒருவர் முன்னிற்கிறார்]

அருந்தவத்தோய்! அடிமையுமை வணங்குகின்றேன்

முனிவர் :— அன்பாநீ வாழ்கஉனக் கென்ன வேண்டும்

நன்மாறன் – பெருந்தனமும் பெண்டிரொடு துறந்து கானில்
பிழையகற்றும் தவமியற்ற எண்ணி வந்தேன்

முனிவர் :— மருந்ததனல் தீயகுணம் மாறுமோ? உன்
மனஅமைதி வெளியிடத்தில் இல்லையப்பா

நன்மாறன் :– பெருந்தவத்தோய் என்னுளத்தை அறிந்த மேலோய்!
பிழைத்தேன்யான் அமைதியினை அடையும் ஆற்றை...

முனிவர் :— ஒழுக்கமுள்ள மாணவனே உரைப்பேன் கேள்நீ

நன்மாறன் :– உய்ந்தேன்யான் ஒண்பொருளை உரைப்பீர் தேவா!
இழுக்கான நான்குபொருள் நீக்கி மூன்று
நற்பொருளை ஏற்றொழுகின் அமைதிகூடும்

நன்மாறன் :– பழிப்பான நான்கும்நலம், பயக்கும் மூன்றும்
பதியும்வகைக் கூறிஎனை ஆள்கஐயா!

முனிவர் :— அழுக்காறு வெகுளிஅவா வஞ்சம் நான்காம்
அறங்கடமை பொதுத்தொண்டு மூன்றும் அன்பா!
ஆக்கமொடு கல்விநிலை அன்புச் சுற்றம்
அனைத்தையுமிவ் வழுக்காறு போக்கும் வாழ்வைத்
தாக்கிமுகம் பொலிவழித்துச் சோர்வை நல்கித்
தகுதியினைக்கெடுத்து விடும்வெகுளி; மேலோர்
நீக்குகுண மாகுமவா; உற்றூர் தம்மை
நீதியறம் நடுநிலைமை நெருங்கா தோடும்
போக்கரிய கொடுமைகளில் செலுத்தி நிற்கும்
பொய்களவு பிறகுறைகள் வளரச்செய்யும்
வஞ்சமெனும் பெரும்பாவி வன்மை போக்கும்
வளமான உடல்கெடுத்துச் சோம்பல் நல்கும்
தஞ்சமென வந்தவரைக் கெடுக்கச் சொல்லும்
தாயுலகைப் பேயுலகாய்ச் செய்யும் பொல்லா
நஞ்சுமொரு நல்வினையைச் செய்தல் கூடும்
நவைபுரியும் இதனைவிடக் கொடியதில்லை
அஞ்சவரும் இந்நான்கும் அகலநின்றால்
அமைதிஉனைத் தேடிவரும் அன்பா! கேள்நீ

அறிவுமுதல் அன்னம்வரை இல்லோர்க் கீதல்
அறமென்பார் அவ்வறத்தைச் செய்வதுன்றன்
திறமைமிகு நல்லுழைப்பால் தேடிப்பெற்ற
சிந்தனையால் செல்வத்தால் செய்தல் வேண்டும்
மறைவான செயல்களைநீ மறந்தும் உன்றன்
மனத்தகத்தே உறையவிடா தோட்டவேண்டும்
நெறியான கேள்வியிலே நின்றுநாளும்
நேர்மையுடன் வாழ்வதுதான் அமைதியாகும்.
வறுமையினல் வளங்குன்றி வருத்தமுற்று
வாழ்விழந்து தமையண்டி வந்தார்க்குற்ற
குறையகற்றித் தன்உழைப்பின் பொருளைத்தந்து
குற்றமற்ற புதல்வர்களை நாட்டிற்கீந்து
நெறியுடைய மனைவியுடன் சுற்றம்போற்றி
நீணிலத்து வாழுமுயிர் அனைத்தும் பேணல்
செறிவுடைய கடமையெனச் செப்புவார்கள்.

நன்மாறன் :- தெளிவடைந்தேன் செம்மையுடன் இனிமேற்செய்வேன்

முனிவர் :— மேலுங்கேள் நாட்டிற்கும் மொழிக்கும் உற்ற
மெலிவுதனைப் போக்குதற்கும் தாழ்ந்த மக்கள்
சீலஞ்சேர் வாழ்வுபெற்றுச் செழிப்பதற்கும்
சிறந்தஉன தெழுத்தால்நற் பேச்சுதன்னல்
கோலஞ்சேர் உடலுழைப்பால் நடிப்பால் பாட்டால்
குறைவின்றிச் சேவைசெய்தல் பொதுத்தொண்டென்பார்
ஞாலத்தார் வசைமொழியும் புகழ்ந்து கூறும்
நன்மொழியும் கேளாமல் நாட்டார் எல்லாம்
ஏற்றுநிற்கும் கடமைதனில் சென்று நெஞ்சம்
இன்பதுன்பச் சூழலிலே மாய்ந்திடாமல்
மாற்றுயர்ந்த தங்கமென வாழ்க அன்பா!

நன்மாறன் :- மண்ணுலகம் உய்யவழி கண்டநல்லோர்
கூற்றினைஎன் உளங்குளிரச் சொன்னீர் தங்கள்
குறிப்புவழி இனிநடப்பேன் வணக்கம் தேவா;

முனிவர் :— போற்றுமொரு குணத்தினைநீ மறந்திட்டாலும்
போக்கலுறும் தீக்குணங்கள் மறந்திடாதே

[மிக்க மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வருகிறுன். மனைவி உவகையோடு தழுவி ஆனந்தக்கண்ணீர் வடிக்கிருள்.]

நன்மாறன் :- கண்மணிநான் அமைதியினைக் கண்டேன் கண்டேன்

பொன்னி :- கருத்தினுக்கும் கண்களுக்கும் அமுதம் வார்த்தென்
பெண்மனத்தில் அமைதியினைச் சேர்த்தீர்! வாழ்வே!
பிரிந்தால் என் உயிர்பிரியும்.

நன்மாறன் :- பேதையேன்யான்
புண்படுத்தி உனைப்பிரிந்தேன் புலமைமிக்க
சான்றவர் என் புன்மையினைத் தீர்த்தார் கண்ணே

[வந்துகொண்டே]

மதிவாணன் :- வெண்முடியும் தாடியும் கொண் டுண்மைகாட்டி
விடுத்ததுவும் வனத்திலந்த முனிவர் தானே?

நன்மாறன் ;- அன்புடைய நண்பாநீ எங்கு கண்டாய்?

[பொய்ம்முடியும் தாடியும் அணிந்துகொண்டே]

மதிவாணன் ;- அவர் என்னுள் மறைந்தொளிரும் திறமையைப்பார்

நன்மாறன் ;- முன்பறியேன் நின்பெருமை அன்பா என்னை
முடிவில்லா இன்புறுத்தி அமைதிகாட்டி
என்பெரிய பேதமையைப் போக்கி நின்றாய்!
எவ்வகையிற் கைம்மாறு செய்வேன் எங்கள்

பொன்னி :- துன்பமதைப் போக்க துணைசெய்த அண்ணா!
சொல்லளவில் நின்பெருமை துளக்கலாமோ?

நன்மாறன் :- எங்களுக்கே அன்றிஇந்த உலகினுக்கும்
ஏற்றதொரு நல்வழியைக் காட்டிநின்றாய்

மதிவாணன் :- பொங்குகிற மகிழ்ச்சியினால் புகழுகின்றீர்
புரியுமொரு கடமையன்றி என்னசெய்தேன்?
மங்கை! யுனதரியபெருங் கற்பால் இன்றுன்
மணவாளன் மனந்தெளிந்தான் அன்றி என்னால்
இங்கமைந்த முயற்சியொரு சிறிதும் இல்லை
இடுக்கணுறின் களைவதுதான் நட்பின் தன்மை
அவரவர்தங் கடமையினைச் செய்தால் என்றும்
அமைதிஎனும் பெரும்பொருள் வந்தடையும் அன்றோ?
தவமுடையோர் தரையாள்வோர் பிறரும் எல்லாம்
தங்களுக்கு வகுத்தகடன் மறந்தால் இந்த
புவிதனிலேயே மாறிவளம் குன்றி எல்லாப்
புன்மைகளும் வந்துறையும் அதனால் மக்கள்
தவிராமல் கடமையினைச் செய்து வாழ்வார்
தமிழெனநீர் அமைதியுடன் தழைத்து வாழி.!

# தமிழ் நாட்டவர்க்கு வேண்டுகோள்.

மூன்று கோடியாம் செந்தமிழ்ப் புதல்வர்கள் மொழிய
மூன்று கொண்டதோர் தனித்தமிழ்ப் பள்ளியும் உளதோ
மூன்று கொண்டதோர் கண்ணுடை வள்ளலே மொழிய
மூன்று கூறிடும் முத்தமிழ் எனும்பெரு மொழிக்கே.

உலகம் இரு வகைத்து. ஒன்று ஒலி வடிவமான உலகம். மற்றொன்று பொருள் வடிவமான உலகம். இரண்டில் ஒலி வடிவமான உலகமே முதன்மை யுடையது. அவ்வுலகம் குடிலையினின்றும் தோன்றி நால்வகை யொலியாய் அகரமுதலான பல்வேறு வகைப்பட்ட எழுத்துக்களாய் மொழிப்பட்டு, அறம் முதலான உறுதிப் பொருள்களைத் தெரிவிக்கும் நூல்களின் வடிவாயுள்ளது. மேலே கூறிய எழுத்துக்களும் மொழிகளும், மக்கள் வசிக்கும் இடத்திற்குத் தக்கபடி பலவிதமான மாறுபாடடைகின்றமையால், இந்தப் பொருளுலகிலே தொளாயிரத்துக்குக் குறையாத மொழிகள் தோன்றலாயின. அவைகளிலே ஐந்து மொழிகள் சிறந்தனவென்று ஆராய்ச்சியாளர் கூறுவர். அவ்வைந்தில் ஒன்றாயது நந்தம் தமிழ் மொழி. இத் தமிழ் மொழியோ பல்லாயிரக்கணக்கான யாண்டுகட்கு முன்னரே தோன்றி அவ்வக் காலத்துத் தோன்றிய நல்லிசைப் புலவர்களால் இயல் வரம்பு பெற்று இன்றுவரை இனிமை குறையாததாய் இலங்குகின்றது. தொல்குடியினராகிய சேர, சோழ, பாண்டியர் ஆண்ட முற்காலத்தே வீட்டியல் வழக்கிற்கும், அரசியல் வழக்கிற்கும் இத் தமிழ் மொழி பயன்பட்டு வந்தமையால் இரண்டாலும் வளர்ந்த இம் மொழி இமயத்தையும் தாண்டி இயங்கும் இயல் புடைத்தாயிற்று. அவர்களின் ஆட்சி வீழ்ந்த பின்னர் ஆரியமொழி தமிழர்களின் வீட்டியல் வழக்கில் புகுந்தது. அதனாலே தமிழ் வளர்ச்சி மிகவும் சுருங்குவதாயிற்று. அதுபோக, பல்வேறு அயல் மக்கள் தோன்றி ஆளத் தொடங்கிய இக் கடைக் காலத்தே அரசியல் வழக்கிலும் இடம் பெறாது நீங்கிற்று. அதனாலே "இரண்டு காலும் அற்ற ஏழை மனிதனைப் போல்" நந்தமிழ் மொழி முடம் பட்டுள்ளது. இம் மொழியை வாயளவில் பேசிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களோ தங்கள் இருவகை வழக்கிற்கும் பிற மொழியையே வழங்கி முதன்மை யான ஒலி யுலகத்தில் முதலில் அடிமைப்பட்டனர். அங்ஙனம் ஒலி யுலகத்தில் பட்ட அடிமை இரண்டாவதாகப் பொருளுலகத்திலும் அடிமையாகக் கிடக்கச் செய்து விட்டது. ஆகவே பிறாது அடிமையினின்றும் நீங்கிப் பொருளுலகத்திலே தன்னரசு செலுத்த விழைபவர்களெல்லாம் ஒலி யுலகத்தில் தாங்கள் பட்டிருக்கும் அடிமைத் தளையையன்றோ அறுத்தெறிய வேண்டும். ஒலி யுலகத்தில் பட்ட அடிமையை நீக்க முடியாது.

பொருளுலகத்தில் பட்ட அடிமையை நீக்க விழைபவன், அடிப்படையற்ற வீடு கட்டத் தொடங்கும் மனிதனை ஒப்பாவானன்றி வேறு யாவரை ஒப்பாவான்? எனவே அடிமைத் தளையினின்றும் நீக்கித் தமிழ் மொழி நல்ல வளர்ச்சியைப் பெற வேண்டும் என்று ஒவ்வொரு தமிழ் மகனும் எண்ணினால் வீட்டியல் வழக்கிலும், அரசியல் வழக்கிலும் அதை வழங்கச் செய்தற்குப் பாடுபடவேண்டியது அவனுடைய முதற் கடமையாகும், நாம் தமிழுலகத்திலே முன்னேற்ற மடைய விரும்பித் தமிழைக் கற்க எண்ணினால், அதற்குரிய தனித் தமிழ்க் கல்லூரிகள் இரண்டொன்றைத் தவிர்த்துச் சில்லாவிற்கு ஒன்றுதானும் உளதோ? அங்ஙனம் இல்லா திருத்தலும், அக்கல்லூரி ஏற்படுத்த நம்மிடம் முயற்சியில்லா திருத்தலும் முறையே நமது தாழ்மையையும் சோம்பலையுங் காட்ட வில்லையா? இங்ஙனமான குறைபாடுகளை யுணர்ந்த நம் பெருந் தமிழ்ப் பெரியாருட் சிலர், தனித் தமிழ்க் கல்லூரி அமைக்க முயன்று வருகின்றனர். அம்முயற்சியிலே ஈடுபட்ட நம் பெரியார் தமிழ்வேள் அவர்கள், கரந்தையில் கரந்தைப் புலவர் கல்லூரி என்னும் பெயரால் தமிழ்க் கல்லூரி யொன்றைத் தோற்றுவித் தார்கள். அக் கல்லூரி நன்கு நடைபெறுவதற்கு வேண்டிய பொருளினை ஒவ்வொரு செல்வரும் உதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தமிழ்ப் பெரும் புலவர்களே! தாங்கள் எங்களிடம் எழுந்தருளி தமிழ் வளர்க்கும் நெறி யைச் சொல்லுவீர்களாக தமிழ்ப் பெருங் குடி மக்களே! உங்களாலியன்ற உதவியை எங்கள் மாணவர் விடுதிக் குச்செய்யுங்கள். கனந் தங்கிய காங்கிரஸ் அரசாங்கத்தார்களே! எங்கள் கல்லூரிக்குச் சிறந்த நன்கொடையை உதவுவீர் களானால் நாங்களும் ஊக்கங் குறையாதவர்களாய் எங்கள் தமிழ்ப் பணியைச் சிறக்கச் செய்வோம். மாணவரும் தமிழ்க் கற்று முன் வருவர்; தமிழுலகமும் அடிமைத் தளையினின்று விடுபடும்.

"எல்லாரும் ஒரு மனத்தா லியற்றுவமே தமிழ்த்தொண்டு
எல்லாரும் ஒரு மனத்தா லியற்றுவமே தமிழ்ப் புதுநூல்
எல்லாரும் ஒரு மனத்தா லியற்றுவமே தமிழ்ப் பள்ளி
எல்லாரும் ஒரு மனத்தா லியற்றுவமே தமிழ்த் திருநாள்"

திரு. தி. அடிகளாசிரியர்,
கல்லூரி விரிவுரையாளர்.

# தமிழ் நாடு.

(வித்துவான் S. தாமஸ் உடையார்.)

---

1. சரித்திர ஏட்டினைத் தள்ளினால்—தெய்வத்
தண்டமிழ் நாட்டினை உள்ளினால்
பெருத்த நினைவிங் குதிக்குதே—நெஞ்சு
பிளந்திடவே ரத்தம் கொதிக்குதே
கருத்துடன் மன்னர்கள் ஆண்டதும்—அவர்
கடல்கடந்தே வென்று மீண்டதும்.
விரித்த பழங்கதை யானதே—சிறு
விளக்கொளியாய் மங்கிப் போனதே.

2. கொற்கையில் மாறனிருந்ததும்—அவன்
குடிகளுக்கே நீதி புரிந்ததும்
பொற்கை யுண்டாகி வளர்ந்ததும்—ஒரு
பொழுது போக்குக் கதையல்லவே.
தற்பெருமை கொண்ட மன்னரை—வென்று
தன்றிறல் காட்டிய குட்டுவன்
விற்கொடி யேற்றிய வீரமும்—இமைய
வெற்பைக் கேட்டாலும் விளம்புமே.

3 ஈராயிரம் ஆண்டின் முன்னரே—மண்ணில்
இத்தாலி ரோமை முதவிய
வேறுநாட்டாருடன் வாணிபம்—செய்து
வீறுபெற்றார் தமிழ் நாட்டவர்.
சீரிய கைத்தொழில் ஓவியம்—எழிற்
சிற்ப முதற்கலை யாயினும்
ஊறிவளர்ந்து திசையெலாம்—புகழ்
ஓங்கிய நாடிது வல்லவோ.

4. பாடும் புலவர்க்கு யானைகள்—தமைப்
பரிசு வழங்கிய நாடிது
ஆடுங் குறமகட் காயிரம்—பொன்னை
அள்ளிச் சொரிந்திட்ட நாடிது.
கேடு பலவந்து சூழினும்—தங்கள்
கீர்த்தியைக் காத்தவர் நாடிது
ஈடும் எடுப்பு மில்லாமலே—புகழ்
எய்திய நாடிது போலுண்டோ?

5. வளைந்த செங்கோலை நிமிர்த்தவே—உயிர்
வழங்கிய மன்னவன் நீதியும்
தளர்ந்தவன் வீழுமுன் தன்னுயிர்—தனைத்
தந்தவள் கற்பும் மறைந்ததோ!
குழைந்தழுவார் துயர் கேட்கவே—உளம்
கூசி யிருகையும் நீட்டியே
விழைந்து பரிதானம் வாங்குவோர்—பண
வேட்டையிலின்று மெலிந்ததே.

6. செந்தமிழிற் பிழை செய்பவர்—முடிச்
சென்னியிற் குட்டிய மன்னனும்
தண்டமிழ்ச் சீத்தலைச் சாத்தனும்—புகழ்
தங்கியிருந்த இந் நாட்டிலே
தந்தமிழ் பேசுதல் தாழ்வெனப்—பிறர்
தாக்கியுரைப்பது கேட்டும் நற்
சிந்தை யடங்கும் அறிஞர்கள்—மொழிச்
சேவகராகவும் நேர்ந்ததே.

7. பெற்று வளர்த்திட்ட அன்னைதான்—தெருப்
பிச்சைக் கலைந்திட வீம்பினுல்
நற்றருமம் புரிசீலர் போல்—இந்த
நாட்டின் நிலையின்று காணுதே.
கற்றவர் சேர்கலைக் கூடமும்—பிற
காரிய மன்றம் கழகங்கள்
பற்பல துறையினும் நற்றமிழ்—மொழி
பரவ ஒருவழி யில்லையே.

8. மந்திரியென்று மார்தட்டுருர்—மதி
வாணரென்றே பறைகொட்டுருர்
தந்தமிழின் நிலைபேசினுல்—தலை
தாழ்ந்து மௌன மிருக்கிருர்
சிந்தனையாளர்க்குப் பஞ்சமா?—கலைச்
சிற்பிகள் தானென்ன கொஞ்சமா
நிந்தனையானது தீருமா—தமிழ்
நிதம் அரசுமொழி யாகுமா?

# ஷெல்லியின் காதல் தத்துவம்.

(வேலூர், காரழகன்.)

உலகிடைத் திகழும் மக்களினங்களை என்றும் மகிழ்வாழியில் மூழ்க வைக்கும் மாண்புடைமை இறவாப் பெருநிலை எய்திய கலைப் பிழம்புகளாம் கவினுறுகவிகளுக்கே உரியது. நிறையறிவுடைய நல்லார்களினுள்ளங்களில் கோயில் கொண்டு முழு அறிவின் முதிர்வால் புனைந்த பாமாலைகளால் படிப்போருள்ளங்களையு முருக்கிப் பாக்கள் வயமாக்கும் பெற்றிமை எய்தியவர்கள் மிகச்சிலரே. மேல் புலத்தைப் பொறுத்த வரையில் தன்னிகரற்றுத் திகழ்ந்து ஐரோப்பிய இலக்கியத்தினுயிராக விளங்கும் மாபெருங் கவி டாண்டே யாத்த ''விட்டா நோவா'' என்ற பாக்கள் கனிந்த காதலின் கொழுந்தெனில் மிகையாகா. உலக இலக்கியக் கடலில் இலங்கும் முத்துக்களே ''விட்டா நோவா'' (இன்ப வாழ்வு) என்றுலக இலக்கியப் புலவர்களொருமித்துரைக்கின்றனர். உவமையற்றுயர்வெய்திய இப் பாக்களுடன் வைத்தெண்ணுமியல்புடைய பாக்கள் ஐந்நூறு ஆண்டுகளாக அரும்பவில்லை என்றாலும் 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கில நாட்டில் இன்ப இலக்கிய இயற்கைக் கவியாக ஷெல்லி ஆங்கில இலக்கிய கவிகள் மன்றத்தில் தோன்றி கவி மணி முடியணிந்து கலைக்கோலேந்தி உள்ளத்தினுள்ளம் என்ற சீரிய பாமாலையாத்து ''காதல் தத்துவம்'' என்ற ஒப்புயர்வற்ற காதல் சித்திரத்தைச் செழுமையுடன் தீட்டி இறவாப் புகழெய்தி மிக ஒய்யாரமாக புலமைக் கூத்தாடி என்றும் காதல் மலர் சொரிந்த வண்ணமாயுள்ளார்

காதலைப் பாடாத கவியில்லை; காதலைப்பாடாதான் கவியல்ல; கவியென்றால் காதல்; காதலென்றால் கவியன்றோ! வாழ்வினொரு கூறு காதலென்றவர்களுமுண்டு. காதலே வாழ்வென்றும் வாழ்வே காதலென்றும் கூறிய கவிகள் மிகச் சிலரே. கீழ்ப் புலத்தைப் பொறுத்த வரையில் முச்சங்கங்கண்டு முத்தமிழை வளர்த்த முத்தமிழகத்தில் காதலே வாழ்வென்றும்—வாழ்வே காதலென்றும் கூறுமியல்புடைய காதலின் சித்திரமே செந்தமிழிலக்கியமாகச் சிறந்து விளங்கல் வெள்ளிடை மலை

பெர்சிய நாட்டுப் பெருங்கவியான உமர்காயம் என்னும் நற்கவி, குவலயம் கனிவுறுவதும் கலக்கமுறுவதும் ஒண்டொடியால் என்று விளம்பினும் மண்ணகத்தை இன்ப மகிழ்வு மன்றமாக்குவது மங்கையரின் மெய்க்காதல் என்று மொழிந்தமை கூர்ந்து சிந்திக்க வேண்டியதே.

ஒவ்வோர் உயிரும் மற்ற உயிரைச் சார்ந்து பிணைந்து இரண்டறக் கலந்து தூய்மையாம் தெய்வீகத் தன்மை யெய்தி தகவுடன் திகழ்வதே காதல். காதலே குவலயத்திற் சிறந்தது; காதலைவிடச் சிறந்தொன்று மில்லை; உண்டெனின் காதலினும் சிறந்தது கடவுளே. மாசகன்ற இரு உள்ளங்கள் மாண்பெய்தி ஒன்றேடொன்றிய ஞான்று கொழுந்துவிட்டு மலரும் மகிழ்வாமின்பமே இணையற்றது உவமையற்றது.

எதையுமேற்காத இயற்கை. இயல்பாகவே யாண்டும் பெருக்கெடுத் தோடினும் காதலொன்றையே இலங்கவைத்துக் கொண்டுளது. இயற்கை யிலிலங்கும் காதல் மன்பதையைப் பிணைத்து மக்களின் அறிவைப் பெருக் கிக் கற்பனையைத் தோற்றுவித்துத் திருமணத்தில் பொருந்த வைத்து உலக ஒற்றுமைக்கடிகோலுகிறது. வாழ்வியலிலிறங்குகையில் அவலமும் தொல்லையுமில்லாமலில்லை. அறிவு முதிர்ந்து கற்பனை மலர்ந்த பின்னர் கற்பனைக்கும் நடைமுறைக்கும் எதிர்மறை ஏற்படின் கவலையும் அழிவும் தான் பலன். இவ் வீழ்ச்சியினின்று விடுபடவேண்டுமாயின் அறிஞர்கள் யாத்த நூல்களின் நுண்மைகளையும் புலவர்கள் பகர்ந்த பொன்னுரை களையும் நற் பொருளாளர்கள் நவின்ற நல்லுரைகளையும் அறியும் அவா வேட்கை மேலீட்டான் நூல்களைத் துருவியாராய விழைவர். அவண் வரும் பாத்திரங்களின் இயல்பையும் போக்கையும் கண்டு ஒருவாறு தேர்வுற்றவர்களுமுண்டு; என்றாலும் தனிமையிலிருக்கும்வரைத் துன்ப மும் தொல்லையுமன்றி வேறில்லை. கற்பனையும் மொழிச் செல்வமும் பெற்ற கலைஞர்கள் சிந்தனையிற் றோய்ந்த உயரிய நல்லியல்புகளைப் பெற்றுப் பேரின்பத்திற் றேங்கித் திளைக்கையில் தானும் கற்பனைப் பொருளும் வேறாகி ஒன்றுங்கால் இனபமெய்தும் நிலையல்லவோ காதல்.

இளமை—நடுமை—முதுமை என்ற முக்கால வாழ்வில் காதல் கைகூடுவான்வேண்டி நடுக்காலத்து இரையான இன்னல்களாம் இன்பமே, முதுமைக்காலத்தின்பத்தினும் மாண்புடைத்து. என்றாலும் உருவாக்கு வதும் உருக் குலைப்பதும் உணர்ச்சி என்பது முற்றிலுமுண்மை. இளைஞனுக் குலகைப் புதுப்பித் துருவாக்குவது உணர்ச்சியே; அவ் வுணர்ச்சிதான் அனைத்தையும் உருவாக்கி இன்றியமையாமையை உண்டாக்குகிறது.

உணர்ச்சியை ஒழுங்காக்குவது மாக்கிளை மீதிருந்து மனமுருகப் பாடும் பறவையின் பாடல்தான். காட்டு மரங்களும்—வளைந்து சாயும் பசும் புல்லும்—மலர்ந்து மகிழ்வுற வைக்கும் மலர்களும்—வெண்ணிற அருவியும்—கனிந்த காதலினுணர்ச்சியை யுணர்ந்தோர்க்குப் புகலிட மன்றே!

இயற்கையிலிரண்டறக் கலந்த ஷெல்லி உலகியலினுண்மைகளை நுணுகியறிந்து நூல்களைப் பயின்று அருவிகளும் குளங்களும் மலர்ச் செடிகளும் மரங்களும் நிரம்பிய இடங்களிலே காலங் கழித்து வந்தார். காதலுக்குக் காரணங் காண்பதரிதென்று ஷெல்லி கூறுகிறார். விழி பொருளைக் காண்கையில் உள்ளத்திலழகரும்புவதால் காதலிப்பதும் காதலிக்காமலிருப்பதும் மன்பதை ஆணையிலா இருக்கிறதென்று வினவி, காதலின் கனிவு உரிமை என்றும் அதை வரையறுத்துக் கட்டுப்படுத்தினால் உதிர்ந்து கருகிவிடுமென்றும்; அடக்கம் — பொறாமை — பயம் இவைகளுக்குக் காதல் எதிர்மறை என்றியம்பித் திருமணம் என்பது சிறைக் கூடம் என்றார். பற்றுக் கோடொன்று மின்றிப் பற்றுதலே காதல்; பற்றுக் கொண்டு பற்றுதல் போலிக் காதல்.

அழகு உயரியது; தூய்மையுடையது; தகவுடையது; மாண்புடையது; சிறப்புடையது; இயற்கையின் பொலிவே அழகு. புரை தீர்ந்த பொற்புடைய பொற்கொடியின் மீது கொழுந்து விட்டுத் திகழும் அழகு, அருள் வடிவான ஆண்டவனின் ஒளியே. அழகும் ஒளியும் ஒன்றே ஆண்டவனின்றி அவனியில்லை; அணங்கின்றி ஆடவனில்லை காரிகையின் எழிலிலும்; சிற்பியின் செதுக்கலிலும், கலைஞனின் எழுத்திலும், கவியின் செய்யுளிலும் இறைவனின் திருவிளையாடலைக் கண்டு களிபேருவகை எய்தலாம்.

நல்லிசைப் புலவர் ஷெல்லி தன் ஒப்பற்ற காதலியைக் கனிவுறும் பாமாலையால் பாராட்டிப் புகழ்ந்து இறவா நிலையாக்கி வையக அறிஞர்களனைவரும் என்றும் படித்தின்புறும் நன்னிலையை நிலவ வைத்துள்ளார்; "உள்ளத்தின் உள்ளம்" என்ற தலைப்புடைய பாமாலையில் காதல் கனிவும்—காதல் ஒளியும்—காதல் சுவையும் தளிர் விட்டொளிர்வதுடன் இறவா இலக்கியக் காதல் கோபுரமாகத் திகழ்ந்து கலங்கரை விளக்கென விளங்கி காதல் வொளியைச் சொரிந்த வண்ணமாயுள்ளது.

உள்ளத்தில் கோயில்கொண்ட ஒப்பற்ற காதலிக்கு உதிர்ந்த நினைவுகளைப் பூமாலையாக்கி அணிவிப்பதாக உரைக்கிறார்; பண் நிகர்க்கும் இன்பக் குரலாளென்றும் எண்ணில ருள்ளங்களில் சிறைபட்டிருப்பினும் இசையால் இடரான உள்ளங்களுக் காறுதலளிக்கிறாளென்றும் இராப் பறவையாம் காதலிக்கு உள்ளத்தைத் தைக்காத முள்ளில்லாத வாடிய ரோசா மலராம் பாமாலையைத் தொடுக்கிறேனென்று கூறிக்காதலியின் பெருமையைப் பகரும் பெற்றிமையென்னே!

பூமாலையைப் பாமாலையாக்கி பொற்கொடியைப்பாடி பேருவகை எய்திய ஷெல்லி ஒளியும்-காதலும்—இறவாமையு மொன்றாகிய பிழம்பே

காதலியென்றும்; விளக்கில்லா உலகில் திரையிடப்பட்ட புகழென்றும்; இறந்தவர்களிடையே இறவாமை என்றும்; புயலுக்கப்பாற்பட்ட விண் மீன் என்றும்; இயற்கைக் கலையின் ஒற்றுமையென்றும் கூறியதோ டல்லாமல் குவலயத்தை ஒளிபெற வைக்கும் கதிரவனின் ஒளி அனைத்தை யும் புகழுற வைப்பதைப் போன்று காதலியின் பார்வை அனைத்தையும் புகழுறவைக்கிறதென்றும் உவகையுறுகின்றார்.

மூடி மறைக்கப்பட்ட இன்பக் கேணியே காதலியென்றும் அவ் வின்பக் கேணியினின்று பாயும் நீரிலிலங்கும் ஒளியும் இசையும், இருளை யும் இசைவின்மையையு மிரித்து இன்பத்தை ஈவதைப் போன்றே காதலி இசையாகவும் ஒளியாகவு மொளிர்ந்து இன்பத்தை அருளுகிறாளென்று களிப்பில் திளைக்கின்றார்.

கரடுமுரடான பாதையையும் துன்ப உறக்கத்தையும் வேய்ங்குழல் இன்னிசையால் கரடுமுரடான பாதையையும் துன்ப உறக்கத்தையும் வேய்ங்குழல் இன்னிசையால் அமைதியாக்குவதைப்போன்று காதலி இன்னிசையால் இனிய அமைதியை இன்புடனீகிறாளென்றுரைத்து மகிழ்கின்றார். காதலியின் ஒப்பற்ற இயல்புகளையும் பண்புகளையும் நன்கறிந்த ஷெல்லி அவனியில் காதலிக்கிணையுடையோர் எவராயினும் உளரோ வென்று நன்கு ஆராய்ந்த பின்னர் ஒருவருமில்லையென்றே உணர்ந்ததாக உளமுருகி உரைக்கின்றார்.

வாழ்க்கையெனும் கரடான பாதையில் சந்தித்தாள் காதலியென்றும், அவள் ஆசையை வீசி இழுத்தாள் இன்ப மரணத்திற் கென்றும் கூறுகிறார்; காதலியால் ஒளி பெற்று-வாழ்வு பெற்று-அமைதியையும் பெற்று இன்புற்றதாகப் பகர்கிறார். காதலனைத்தையும் சமத்துவமாக்கு கிறதென்றும், உயிர் இறைவனை வழிபடுகையில் வழிபடுபவனும் இறை வனும் இரண்டறக் கலந்தொரு நிலையில் வேறுபாடின்றி சமத்துவமாக இருப்பதைப் போன்றதே காதலென்றும், காதலை எய்தியவர்கள் மிக உயர்ந்தவர்களென்றும் உவகையுறுகிறார். கவி ஷெல்லி.

அனைத்தையுமறிய வைப்பதைப் போன்றதே காதலென்றும் அக் காதல் ஒளிபெற்று வளர்கிறதென்றும் அக் காதல் பல உண்மைகளை உற்று நோக்குகிறதென்றும் கூறிய கவி ஒத்த நம்பிக்கையும்-ஒத்த கருத் தும்-ஒத்த வாழ்க்கையும்-ஒத்த மரணமும் காதலிருவரையும் நிலைத்த இறவாமையிலிரண்டறக் கலக்கவைக்கிறதென்றும் பெரிதும் களிப் புறுகிறார்.

உள்ளத்திற்றுள்ளும் காதல் சிறகுடைய வார்த்தைகளால் மிக உயர்ந்த மிக அருமையான காதலுலகிடை ஒளியாகத் தவழ்ந்து தன்னைப் பிணைக்கிறதென்றும் அப்பிணைப்பால் மகிழ்வாழியில் மூழ்கி மூழ்கித் தேங்கித் திளைப்பதாகவும் பகர்கிறார்.

காதலென்பது, ஆண் - பெண்ணையும்; பெண் - ஆண் மகனையும் ஈர்ப்பதன்றி வேறில்லை என்னுங் கருத்துடையார் மிகுந்திருப்பனும் உண்மைக்காதலை உரைத்த ஷெல்லியின் அருமை அளத்தற்கரிது; மதித்தற் கரிது.

கற்பனையில் ஒருவர் மூளையில் மலரும் எண்ணமே மற்றவரிடத்து மலர்தலும் - மற்றவர் உணர்ச்சி இன்னொருவரைத் தூண்டி இயங்கவைத்தலும் - விழியின் ஒளிப் பிழம்பு விரைவில் கலந்து உளத்தை இளகவைத்தலும் - அன்பின் காரணமாக அமைதி நிரம்பிய இதழ் உள்ளக் கனலால் அமைதி இழந்து, துடி துடிக்கும் இதழுக்குப் பதிலின்றி, அமைதியுடனிலங்கலுமே காதல் என்று ஷெல்லி கூறி, அருவிகள் ஆறுகளுடனும், ஆறுகள் கடலுடனும் விண்காற்று என்றும் இன்ப உணர்ச்சியுடனும், ஒன்றுகின்றனவென்றும்; உலகில் தனியாக ஒன்றுமில்லை என்றும் எல்லாப் பொருளும் தெய்வீகச் சட்டத்தால் கலந்து பின்னி இருப்பதால் நான் ஏன் உன்னுடனிருத்தல் கூடாது என்று வினவுகிறார்!

வாழ்க ஷெல்லியின் காதல்.

# வஞ்சப்போர்.

வித்துவான் ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி தஞ்சை.

---

## கவிதை நாடகம்.

---

### காட்சி 1.

[கன்னிநாட்டரசன் அவைக்கு வருகிறான். எல்லோரும் எழுந்து மரியாதை செய்கின்றனர். மந்திரி வாழ்த்துக் கூறுகிறான்.]

மந்திரி :— மதிப்புமிகு மன்னவனே! வணக்கம். வாழி!

அரசன் :— மாண்புடைய நல்லமைச்சே! மறப்புண் ஏந்திக்
கொதிப்புடைய பகைமுடித்துக் கொற்றங் கொள்ளும்
கோளரியாம் மாறவர்மா! அமரும் நன்றி!
எதிர்பவரை எமன்விருந்தாய்ச் செய்யும் ஆண்மை
எழுச்சிமிகு வீரர்களே! அமரும் நாடு
விதிப்படியே, நன்முறையில் விளங்கி வாழ
வினைபுரிவோர் அனைவர்க்கும் எனது நன்றி
மக்கள் நலம் குறைவின்றி உளதோ?

மந்திரி :— ... ... ... ... மன்னா!
வற்றாத காவிரியின் வளமும் தங்கள்
தக்கதொரு செங்கோலும் தமிழும் இங்கே
சார்ந்திருக்கக் குறை யேது?

அரசன் :— ... ... ... மகிழ்ச்சி எல்லாப்
பக்கமும்நம் சிற்றரசர் திறைசெலுத்திப்
பணிவாக உள்ளனரோ? பாவல் லோர்கள்
சிக்கலின்றிச் செல்வமுடன் வாழ்கின்றாரோ?

மந்திரி :— சிறப்பாக வாழ்கின்றார் ... ... ஆனால்

அரசன் ;— ... ... ... ... ... என்ன?

மந்திரி :— பாங்குடனே எல்லோரும் பரிந்து வந்து
பக்தியுடன் திரையளந்து சென்று விட்டார்
வேங்கைபுரி மன்னவன்தான் இன்று காறும்
விதிப்படிநம் அரசிறையை விடுக்க வில்லை

அரசன் :— தாங்கவொண்ணப் பஞ்சத்தில் தவிக்கின்றனே?
தங்கத்தை அனுப்புதற்குத் தடையா என்ன?

மந்திரி :— ஆங்கவனுக் கொருகுறையும் இல்லை என்றே
அறைகின்றார் தூதுவர் ... ... ...

அரசன் :— (கோபத்துடன்) ... ... அப்படியா செய்தி?
அற்பனம தாண்மையினை அறியா மூடன்
அரைக்கணத்துள் அவன்நாட்டைச் சூறையிட்டு
விற்பிடிக்குங் கைகளிலே விலங்கை மாட்ட
வீரர்படை இப்பொழுதே செல்ல வேண்டும்
பொற்புடைய மாறவர்மா! படைத் தலைமை
பூண்டுசென்றப் புல்லனை இங் கிழுத்து வாரும்!
நற்பதவி விரும்பாஅந் நாயின் நாட்டை
நரிசேரும் காடாகத் தீயை மூட்டும்!

மாறவர்மன் :- தீயோடு விளையாடும் சிறுவன்; மன்னு!
சினந்தணிக; செல்லுகிறேன் ஆனல் ஒன்று
பேயாடப் போர்புரியும் முன்னே என்ன
பிழையங்கு நேர்ந்ததென அறிந்து கொண்டால்...

அரசன் :— (சினம்) நீயா இம் மொழிபேசுகின்றாய்? நீசன்
நெடுநாளாய்த் திறையளக்க வில்லை என்றால்
வாயாலே கூருமல் வம்பிழுக்க
வருகின்றான் என்பதுதான் பொருள்; வேறென்ன?
இப்பொழுதே படையெடுத்துச் செல்க! புல்லன்...
என்பணியை மீறியவன் இந்த மண்ணில்
எப்பொழுதும் வாழ்வதற்கு முடியா தென்ற
உண்மையினை இன்றவனுக் குணர்த்த வேண்டும்

மாறவர்மன் :- அப்படியே செய்கின்றேன் ஆனல்......

அரசன் :— (வெகுண்டு) ... ... ... என்ன—
ஆனல்? என் ஆணைஇதை உடனே செய்க!

மாறவர்மன் :- தப்பின்றித் தங்களது பணியைச் செய்வேன்
தயைபுரிந்து.........ஒருவார்த்தை......

அரசன் :— ... ... ... ... என்ன கூறு?

மாறவர்மன் :- ஆர்த்தெழுந்து வெறிபிடித்து மக்களெல்லாம்
வளமொழிய, அழகழிய, அலறிவீழ
நீர்த்திரைபோல் செங்குருதி நிலத்தில் பொங்க
நெடுங்குதிரை யானைமுதல் மக்கள் மாளப்
போர்த்தொடுத்து நாடழித்து.........

அரசன் :— (மிகவும் கோபமாய்) ... ... போதும் போதும்
பொருத்தமின்றிப் பேசுகிறுய் இனிமேல் உன்றன்
வார்த்தையினை நிறுத்தியென தாணையைச்செய்!
வலிமையற்ற வெறுங்கதையை வளர்க்க வேண்டாம்

மாறவர்மன் :- வெஞ்சினத்தை அருள்கூர்ந்து விடுக வேந்தே!

அரசன் ;— வீரமற்ற கோழையா நீ? படை எடுக்க
அஞ்சினையேல் அப்பால்போ! ஆண்மை அற்ற
அரசருக்கும் பேடிகட்கும் வாள் எதற்கு?
நெஞ்சுறுதி நீண்டபெரும் போர்மகிழ்ச்சி
நிலம்பெருக்கல் பகைவர்தமை அடிப்படுத்தல்
தஞ்சமென்ருேர் தலையகற்றல் அரசநீதி
தலைமையினை உனக்களித்தேன் தகுதியின்றி

மாறவர்மன் :- மன்னிக்க வேண்டுகிறேன் அரசே! தங்கள்
மனப்படியே அரைநொடியில் வென்றுவந்தும்
பொன்னடியில் பகைவனையான் பொருத்துகின்றேன்
புரிந்தபிழை மறந்தெனை நீர் அனுப்ப வேண்டும்

மந்திரி :— தன்னுடைய மனக்கருத்தை மொழிவதற்குத்
தாம்நினைத்தார் அன்றிஉம தாணைமீற
அன்னவர்தான் எண்ணுவரோ? மேலும் தங்கள்
அன்புடைய மைத்துனர்...மாவீரர் அன்ருே?

அரசன் :— சட்டத்தை மீறுபவன் தனையனேனும்
தண்டித்தல் என்கடமை தகுதியற்ற
திட்டத்தை மொழிவதற்கு இதுவா நேரம்
திறமறிந்தே மாறனையான் தேர்ந்தெடுத்தேன்

மந்திரி :— (மாறனிடம்) மட்டற்ற மகிழ்ச்சியுடன் சென்றுவாரும்
மன்னவருக் குற்றகுறை உமக்குந்தானே?
கொட்டத்தை அடக்காமல் விட்டால் நாளை
குன்றைப்போல் வலிமையுடன் எதிப்பார் நம்மை

அரசன் :— பிறநாட்டார் வலியடைந்து பெருகிவிட்டால்
பின்னர்நமக்கரசேது? பெருமை என்ன?
சிறுநாட்டார் வளம்பெற்றுச் செழுமை கொள்ளச்
சிந்திக்க விடுவது பேரரசர்கட்கோ
அறமாக தென்பதைநீ அறியவில்லை
அடிமைகளைத் தலையெடுக்க விடுதல் தீமை

மாறவர்மன் :- மறவேன்யான் செல்லுகிறேன் வணக்கம் மன்னு!
வாகையினைச் சூடியபின் வருவேன்......

அரசன் ;— ... ... ... ... ... செல்க!

முதற்காட்சி முடிவு.

---

## காட்சி 2.

[அரசன் தங்கையும், மாறவர்மன் மனைவியுமான கோதை தன் கணவன் தன்னிடம் விடைபெருமல் சென்ற வருத்தத்தால் அமைதியை நாடிச் சோலைக்கு வருகிருள். அரசன் மனைவியும் சற்றுப் பின்னே வருகிருள்.]

கோதை :- (தனியே) போருக்குச் செல்லுகின்ற காதலர்கள்
புகலாமல் போய்வருதல் வழக்கமில்லை!
பேருக்கும் ஒருவார்த்தை என்னிடத்தில்
பேசாமல் என் சென்ருர்? பிழை செய்தேனு?
ஆருக்குந் தீங்கிழையா அன்பு கொண்ட
அத்தான்! நான் என்செய்தேன் அகன்று சென்றீர்?
நீருக்குள் சிக்கினவர் உள்ளம் போல
நெஞ்சுமிகத் துன்புறுவேன் நீங்கள் என்னை.

அரசி :— (பின்புறம்வந்து) குயிலுக்குக் குரலினிமை தருகின்ருயோ?
கோதை! நீ அங்கென்ன பேசுகின்ருய்?

கோதை :— மயிலுக்குச் சாயல்தரும் மதனி நீங்கள்
மற்றவரை அப்படியே எண்ணி விட்டீர்

அரசி :— (அவள் கண்ணீர் விடுவதனைப் பார்த்து)
வெயிலுக்குப் பயந்திங்கு வந்தேன் இந்த
வேளையில் நீ ஏன்வந்தாய்? பிறழும் இந்தக்
கயலுக்கு நீரில்லை என்று கண்ணின்
கரைமுட்ட நீர்தேக்கு கின்றாய்?

கோதை :— (அழுங்குரலோடு)... ... ... அண்ணி!

அரசி :— (அவளை அணைத்து) நாளைக்கே மாறவர்மர் வாகைசூடி
நாத்திக்கும் பரிசுகொண்டு வருவார் நீயேன்
பாளைக்குள் முத்துகளைப் பதுக்கு கின்றாய்?
பல்லுக்கு முல்லைமுகை தோற்கும் என்று?
வேளுக்குத் தோற்றாய் நீ.

கோதை :— (சோகத்துடன்) ... ... ... அண்ணி! அத்தான்
விரும்பி எனைப் பாராமல், விடைபெறாமல்.

அரசி :— (பரிகாசமாய்) தோளுக்குமேல் முத்தம் ... ... ...

கோதை :— (இடைமறித்து) ... ... போங்கள் அண்ணி
சொல்லுவதைக் கேளாமல்.

அரசி :— (அன்புடன்) ... ... ... சொல்லு

கோதை :— (அப்பொழுது அரசன் வருவதைக்கண்டு) அண்ணா.

அரசன் :— (வந்துகொண்டே) கோதை என்ன சொல்லுகிறாள்?

அரசி :— ... ... ... ... ... ... மாறவர்மர்
கூறாமல் போருக்குச் சென்றாராம்

அரசன் :— (மறித்து) ... ... ... ... நீ
பாதை சொல்ல வந்தாயோ?

கோதை :— ... ... ... ... ... ... இல்லை அண்ணா
பழக்கம் போல் இல்லாமல்.........

அரசன் :— (அன்புடன்) ... ... ... தங்காய்! உன்னை
மேதை என்று நினைத்திருந்தேன் வீரனுக்கு
விருப்பமெலாம்................

கோதை :— (இடைமறித்து) ... போர்க்களத்தில் தானே?........

அரசன் :— (நகைப்புடன்) ... ... ... ... நல்ல
பேதையம்மா நீ, நாளை வாகை சூடிப்
பெருமையுடன் அவர் வந்தால் உனக்குத் தானே.

மந்திரி :— (வந்துகொண்டே) மன்னவனே! வணங்குகிறேன்

அரசன் :— ... ... ... ... ... வருக! என்ன?

மந்திரி :— மறவர்படை வேங்கைபுரி சென்று நேற்று
மின்னலெனத் தாக்கிபெரும் வெற்றி கொண்டு
வீரசங்கம் ஊதுவதாய் வீரன் வந்து

அரசன் :— சொன்னு? பெரும் மகிழ்ச்சி மாறவர்மர்
சொன்னபடி செய்தேதான் வருவார் நீர்போய்
அன்னவனுக் கரிய பொருள் பரிசு தாரும்!

மந்திரி :— அப்படியே! (மந்திரி போகிருன்)

அரசன் :— (கோதையிடம்) பார்த்தாயா கோதை!

கோதை :— (பெருமகிழ்வோடு) ... ... ... அண்ணு!

அரசன் :— மாவீரன் மாறவர்மன் பெருமையை நீ.........

அரசி :— மைத்துனரைத் தாங்கள் தான் புகழ வேண்டும்

மந்திரி :— (வந்து) கோவே! நம் மாறவர்மர் வெற்றி பெற்ருர்
"கோட்டையில் நம்கொடிவீசிப் பறக்கு"தென்றும்
"சாவொமென் ருேடிவிட்டான் பகைவன்"என்றும்
தங்களுக்குத் திருமுடங்கல்.

அரசன் :— ... ... ... கொடுங்கள் இங்கே!
(மகிழ்வாகக்) கோதையைப்பார்த்து
பாவாய்! உன் பதி உனக்கும் கடிதம்...இந்தா.

அரசி :— (பரிகாசமாய்) படைமுகத்தும் பத்தினியை மறக்க வில்லை.

அரசன் :— (மந்திரியிடம்) வெற்றிவிழா நடத்துவதற்கேற்ற வெல்லாம்
விரைவாகச் செய்திடுக! வீரர்கட்குப்
பற்றுமிகும் பகல் உணவு செய்க! நல்ல
பரிசுதர ஆவனநீர் செய்க!

மந்திரி — ... ... ... ... ... ஆணை (செல்லுகிறார்)

அரசன் :— (அரசியிடம்) பெற்றிமிகு மாறருக்குப் பெருமைமிக்க
பெரும்பரிசாய் எதைக் கொடுப்ப தென்று.

அரசி :— ... ... ... ... ... நாதா !
மற்றுமொரு பரிசா? நம் கோதையை ஏன்
மறந்தீர்கள் இவளைவிட மகிழ்ச்சியாகக்
கொள்ளுமொரு பரிசுண்டோ மாறருக்கு?

கோதை :— குறும்பாகப் பேசுவதே அண்ணி வேலை.

அரசன் :— எள்ளளவும் அவள்மொழியில் தவறே இல்லை
ஏற்றதொரு பரிசினைத்தான் இயம்புகின்றாள்,

கோதை :— கள்ளொழுகப் பேசியுங்கள் கருத்தை, அண்ணி
களவாடிக் கொண்ட பின்னர் தங்களுக் கென்(று)
உள்ளபடி ஒருகருத்தும் இல்லை...அண்ணி
ஓதுவதே வேதமொழி.

அரசன் :— (நகைத்துக்கொண்டே) ... உண்மை உண்மை !
அலுவல்மிக உள்ளனநான் போக வேண்டும்
அமைச்சர் அதோ வருகின்றார்.

மந்திரி :— ... ... ... ... வணக்கம் மன்னா !

அரசன் :— நலமாக நடக்கிறதா காரியம் நம்
நகரெங்கும் அறிவிக்க...அமைச்சரே! ஏன்
பொலிவின்றிக் காணுகிறீர்? புதுமை ஏதும் !

மந்திரி :— (வருந்தி) புவியரசே ! என்ன சொல்வேன்.

அரசன் :— ... ... ... ... என்ன? சொல்லும்
பலமான யோசனையேன்?

மந்திரி :— ... ... ... அரசே ! உள்ளம்
பதைக்கிறதே அவன் சொன்ன மொழிகள் வாயால்
உரைப்பதற்கே கூசுகிறேன்.

அரசன் :— ... ... ... சென்றன்னை
உடனேயிங் கனுப்பிவையும் (தூதனைப்பார்த்து) யாரடாநீ?

தூதன் :— விருப்புடைய அரசே ! தாள் வணங்கு கின்றேன்
வேங்கைபுரியில் இருந்து வந்த தூதன்.

அரசன் ,— கரிப்பாகக் கொண்டுவந்த செய்தி என்ன ?

தூதன் :— காவலனே நம்படைகள் நாட்டை வென்று
நெருப்பாக்கிப் பகைதுடைத்து வாகை சூடி
நெடுமலைக்குப் பின்னுள்ள குகையைத் தாண்டி
வரும்போது நள்ளிரவில் பகைவர் கூட்டம்
வழிமறித்து மாறவர்மர் தேரைச் சூழ்ந்து
பெரும் போரை நிகழ்த்தின நம் மறவர் கூடிப்
பிணமாகச் செய்தார் அப்படையை...ஆனால்
திரும்பிய நம் படைகளை அத் தீயர் கூட்டம்
தீம்புனலில் விடமிட்டுக் கொன்று விட்டார்
இரும்பான நெஞ்சுடைய மாறர் நெஞ்சில்
இடப்பக்கம் வஞ்சத்தால் வேலைப்பாய்ச்சி,

அரசி :— (சோகமாய்) மாய்ந்தாரா மாறவர்மர் ? பிரிந்தாயா நீ
[(அழுங்குரல்)
வஞ்சகர்உன் உயிர்மடித்தார் பாவி அந்தோ !
பாய்ந்துவரும் புலியையொத்தவீரா !

கோதை :— (அழுகையுடன்) ... ... ... அண்ணா !
பாவிஇனி என்செய்வேன் என்றன் வாழ்வு
தேய்ந்துவரும் மதிபோல ஆயிற்றையோ [மூர்ச்சையா
கிறாள்]

அரசன் :— [படப்படப்பாய்] தீயிலிட்டுப் பொசுக்குகிறேன் அவன்
[குலத்தைச்
சாய்ந்து விட்டாள் என் கோதை ...... தங்காய்! தங்காய் !
தாங்கேன்யான் இக்கொடுமை...அமைச்சே! செல்க
என்படையை இப்பொழுதே ஆயத்தம்செய் !

அரசி :— (அழுகையுடன்) என்னரசே ! எதிர்ப்பதற்கு நேரில்லாத
வன்பகைவர் வஞ்சத்தில் நீரும் சிக்கி..........
மன்னா!யான் உமைப்பிரிந்துவாழேன் வேண்டாம்,

அரசன் :— தன்பலத்தை நம்பாத நரிக் கூட்டத்தைத்
தவிடுபொடி செய்திடுவேன் ... தங்கைக்குற்ற
துன்பமதை எப்படிநான் சகித்திருப்பேன் ?
துட்டர்களை இப்பொழுதே அழிக்கவேண்டும்.

மந்திரி !— (வந்து) வேந்தே!நம் வாயிலிலே உம்மைக் காணும்
விருப்பமுடன் ஒரு பெரியார் வந்துள் ளார்கள்
சாந்தம் ஒரு உருவெடுத்தாற் போல மேனி
சடைமுடிகள் பால்போன்று நரைத்துள்ளார்கள்
தீந்தமிழில் வல்லவராம் சித்தரைப்போல்
செத்தவரை எழுப்புகிற திறனும் உண்டாம்.

அரசி :— (வியந்து) மாய்ந்தவரை எழுப்புவதா? அழைத்து வாரும்.

அரசன் :— முனிவரைப்பார்த்து) வணக்கம் ஐயா!

முனிவர் : –[மாறுவேடத்தில் வந்த மாறவர்மன்] வாழிய! நின் செங்கோல் வாழ்க!

கரும்புடனே நெல்விளையும் கன்னி நாட்டுக்
காவலனே கலக்கமென்ன உன்முகத்தில்?
அரும்புகிற கோபத்தைப்பார்த்தால், இந்த
அகிலமெலாம் எரிந்துவிடும் போலும்......மன்னா!
பெரும்படைகள் வேங்கைபுரி சென்று வெற்றி
பெற்றதனால் வெற்றிவிழா இன்றுசெய்ய
விரும்பினை என்(று) அறிந்தலவோ வந்தேன்.....

அரசன் :— [வாட்டத்துடன்]... ... ... மேலோய்!
வெற்றியெலாம் ஊழ்வலியால் தோல்வியாச்சு.

முனிவர் ;— ஏன் தோல்வி? மாறவர்மர் இருக்க உன்னை
இத்தலத்தில் வெல்பவரும் உண்டோ?

அரசன் :— ... ... ... ... ஐயோ!
தேன்போல மொழிபேசும் கோதை வாடத்
திசையறியா மாலுமிபோல் யான் திகைக்க
வான்போற்றிச் சென்றுவிட்டார் மாறர் என்னை
வஞ்சித்தார் பகைவர் இனித் தாளேன் இன்றே
ஊன்விரும்பும் என்வாளுக் குணவளிக்க
உத்தரவு தாருங்கள்............

அரசி :— (அழுங்குரலோடு) ... ... பெரியோய்! என்னை
பிரிந்துசெல்ல எண்ணுகிறார் .....மாறர் தம்மை
பெரியதொரு வஞ்சத்தால் கொன்ற தீயர்
பொருந்தாத செயல்புரியின் என்ன செய்வேன்
புன்செயலைப் புன்செயலால் வெல்லல் தீய
மருந்தினை ஓர் மருந்ததனால் மாற்றல் போல
வஞ்சத்தை வஞ்சத்தால் வெல்லவேண்டும்.

அரசன் ;— திருந்தாமல் பேசுகிறாய் தேவி! என்றன்
திறமையினை நீயறிய வில்லை போலும்

வீரமுள்ள அரசர்குலத் துதித்த நீயா
வீணுரைகள் பேசுவது? பெண்ணே! என்மேல்
ஈரமுனக் கிருந்தால்யான் போர்க்குச் செல்ல
இப்பொழுதே விடைகொடுக்க வேண்டும்

முனிவர் :— (இடைமறித்து) ... ... ... மன்ன!
தாரமென வந்தவரைத் தவிக்கவிட்டுத்
தன்னலமே குறியாகப் பேசுகின்றாய்

அரசன் :— சீரியநற் பெரியோய்! என் தங்கைக் குற்ற
தீராத துன்பத்தைப் பார்த்த பின்னர்.........

முனிவர் :— படையெடுத்துப் பகைவர்களை அழித்து விட்டால்
பறந்திடுமோ இவள் துயரம்? அன்றிமாறர்
நடையெடுத்து வருவாரோ? சினத்தைப் போக்கி
நான்கூறும் சின்மொழியைக் கேட்டுச் செல்க!

அரசன் :— சடைமுடித்த பெரியோய்நும் சித்தி தன்னால்
தங்கை துயர் நீங்கதயை புரியவேண்டும்

அரசி ;— அடியிணைகள் வணங்குகிறோம் மாறர் தம்மை
ஆவிபெற்று வரும்படிநீர் செய்ய வேண்டும்

முனிவர் :— (நகைத்து) பிரமாவா செத்தவரைப் பிழைக்கச் செய்ய

அரசி ;— [பணிவுடன்] பெருமைமிகு முனிவர்களால் ஆகும் இந்த
வரமொன்று தந்தெம்மை வாழவைப்பீர்!

முனிவர் ;— வருந்தாதீர் என்றால் ஆம் உதவி செய்வேன்
[மன்னனைப் பார்த்து] தரமான சிலகேள்வி கேட்பேன் மன்ன!
தகுந்தவிடை நீயளித்தல் வேண்டும் ஒன்றும்
முரணகக் கேளேன்யான்.........

அரசன் ;— ... ... ... ... முனிவா! ஏதோ
முடிந்தவரைத் தகுந்தவிடை அளிப்பேன் கேளும்

முனிவர் :— போருக்குச் சென்றவர்கள் எத்தனைபேர்
பொன்றாமல் மீண்டுவந்தார்? போர் ஏழுந்த
காரணமென்? பகைவர்களில் எஞ்சியோர்கள்?

அரசன் :— களத்தைவிட்டு வந்தவர்கள் பாதிப்பேரே
வீரமுடன் மாய்ந்தவர்கள் மீதி வீரர்
வேங்கைபுரி திறையளவாக் காரணந்தான்
போரங்கே பொன்றினவர் மறைவாய் ஓடிப்
போனவரும் வஞ்சியரும் தவிர மற்றோர்

(தொடரும்)

(68-ஆம்பக்கத் தொடர்ச்சி)

னார்கள். ஞானியார் அடிகள் படத்தினை திரு. இராசக்கண்ணனார் அவர்கள் திறந்துவைத்து ஞானியார் அடிகள் பிற மடங்களும், கலைக் கழகங்களும், பிறரும், மேற்கொண்டு செய்துவராத முறையில் தமிழ் நாட்டு மக்களுக்குத் தமிழறிவைச் சமயத்துடன் பிணைத்துச் சொற் பொழிவு செய்துகாட்டியவர் என்று கூறினர். இறுதியில் திரு. க. அன்பழகன் அவர்கள் சரித்திரகாலம் தொடங்கித் தமிழ்மொழி பிற மொழிக் கலப்பிலும், தமிழினம் பிற இனத்தாலும், தமிழ்ப்பண்பு பிறர் கலப்பாலும், பெரிதும் சீரழிந்திருப்பதால் நாம் விழிப்பாக இருந்து தமிழ் மொழி, பண்பு, இனம் இவை மேலும் சீரழியாமல் காக்கவேண்டுமென்றும் கூறினர்.

அரசியலாருக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் 20 முடிபு களுக்குமேல் நன்கு ஆராய்ந்து அனுப்பப்பட்டன. இதில் சிறந்த முடிபுகள் சென்ற பொழில் இதழில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் உடனே அரசியலார் நோக்கம் செலுத்தி ஆணையிடுமாறு மன்றுட மாவட்ட முறையில் எழுபேர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. தலைவர் முடிவுரையில் தமிழ்மொழி ஆக்கம் கருதிக் கூறினர் கூட்டம் இனிது முடிந்தது.

இந்த மாநாடு தமிழாசிரியர்கள் மாநாடு என்ற அளவில் கூட்டப் பட்டிருப்பினும் நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மக்கள் அனை வருக்கும் ஆக்கம் தரும் முறையில் அமைந்திருந்தன. ஜனாப் ஜின்னா சாயபு ஒருவர் பாகிஸ்தானையும், பொட்டி. ஸ்ரீராமுலுவின் கிளர்ச்சி ஆந்திரா வையும் பிரித்து நடத்த இடம் தந்த இந்தியர் தமிழர்கள் ஒன்றித் தனித்து ஆட்சிபுரிய வேண்டுமென்று கேட்டால் கிடைக்காமலாபோகும்? உடனே தமிழாட்சி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை கூட்டத்தில் உள்ள அனைவருக்கும் இருந்தது என்பதில் ஐயமில்லை. கூட்டம் முடிந்ததும் அடுத்த மாநாடு தம் தம் மாவட்டத்தில் நடத்தவேண்டுமென்று போட்டி போட்டுக்கொண்டு பிரிந்தனர்.

---

# சிலந்தி சிரித்தது.

" வளவன் "

---

கட்டுரை எழுதுவதற்காக கற்பனைப் பறவையின் இறக்கைகளை அவிழ்த்துப் பறக்கவிட்டவாறு உச்சிமோட்டைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கே சிதைந்த தன் வலையைச் சீர்ப்படுத்திக் கொண்டிருந்தது ஒரு சிலந்தி. அதன் செய்கை உலகம் ஒப்பும் ஒரு உண்மையை நினைவுறுத்தியது.

அந்த உண்மை—"உலகில் உள்ள ஒவ்வொரு உயிரும் வாழ விரும்புகிறது; எப்படியாவது எந்த வழியிலாவது தான் வாழ வேண்டும் என்று நினைக்கிறது." இல்லாவிட்டால் இந்தச் சிலந்தி பட்டிழையைவிட மெல்லியமின்னும் இழைகளைக்கொண்டு அழகாக மாயவலை பின்னி அதிலே பல சிறு உயிர்களைச் சிக்க வைத்து அவைகளின் உயிர்களைப்போக்கி உண்டு மகிழுமா?

இந்த உலகப் படைப்பே எனக்கு விசித்திரமாக, விடுவிக்க முடியாத புதிராகத் தோன்றியது.; பதுங்கும் புலிக்குப்பாய்ந் தோடும் புள்ளிமான் இரையாகிறது; வாழ நிற்கும் கொக்கிற்கு நீரில் ஓடி விளையாடும் மீன் இரையாகிறது. ஒருவன் உழைத் துச்சாக, மற்றொருவன் உண்டு மகிழ்ந்து உப்பரிகையிலே உலாவு கிறான். இப்படித்தானே உலகம் நடைபோடுகிறது. இயற்கையின் போக்கே இப்படித்தானோ? இயற்கையின்போக்கு இப்படி இருந்தால் விட்டு விடலாமா? ... ஒன்றின் உயிரும், உழைப்பும் மற்றொன்றின் உணவிற்கும், உல்லாசத்திற்கும் உறைவிடமாக அமையத்தான் வேண்டுமா?...

இவ்விதமாக வினாக்களை எழுப்பி அதற்கு விடை கண்டு கொண்டிருக்கையில் "அண்ணா! அண்ணா!!"..."நரி! நரி!" என்று ஒரு படத்தை எடுத்துக் கொண்டு என்னிடம் ஓடி வந்தான் ஏழாண்டுகள் நிரம்பிய என் தம்பி. படத்தைப் பார்த்தேன் மிக அழகாக இருந்தது. அதை ஒரு ஆற்றல் மிகுந்த ஓவியன் தான் தீட்டி இருக்கவேண்டும். வண்ணச் சேர்க்கையைச் சரியாகக்

கூட்டிக் குழம்பாக்கி ஒளி விடும் ஓவியமாக அவன் அந்த எழி லுருவைச் சமைத்ததற்காக மட்டும் நான் அவனைச் சிறந்த ஓவி யக்காரனாகக் கருதவில்லை. அவன் அந்த ஓவியத்தை அதன் நிலைக்கேற்ப உணர்வுகளை வெளியிடுமாறு வரைந்திருந்தான். அந்த ஓவியத்தில் நரியோடு நண்டும் இடம்பெற்றிருந்தது ஆனால் எங்கே?...

நரியின் வாயில் சிக்கிக்கொண்டு தன் உயிர்ப்போராட் டத்தை நடத்திக்கொண்டிருந்தது. ஆனால் நரியோ தன் கண் களின் விஷமச் சிரிப்பைச் சிந்தவிட்டு அதுபடும் துன்பத்தைக் கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தது! எப்படி இருக்கிறது ஓவியத் தின் முழு உருவம்?...

ஓவியத்தின் கீழே உள்ள வரிகளைப் படித்தேன். 'நரிக்குக் கொண்டாட்டம், நண்டுக்குத் திண்டாட்டம்' என்றிருந்தது. அந்த இரண்டு வரிகளில் அழகும் அர்த்தமும் பொதிந்து கிடப்ப தைக்கண்டு வியந்தேன். வியப்பிற்குப் பிறகு என் இதழ் இணைகள் விரிந்து ஏளனச் சிரிப்பைச் சிந்தின. ஏன்?........

"ஸார்! பேப்பர்!" என்ற குரல் கேட்டுத் திருப்பிப் பார்த் தேன். பையன் செய்தித்தாளைப் போட்டுவிட்டுப் போய்க் கொண்டிருந்தான். எடுத்துப் பார்த்தேன். பசுமையான இலை களின் நடுவே வண்ண மலர்கள் எளிதில் தெரிவதைப்போல் அதிலிருந்த பெரிய எழுத்துக்கள் முதலில் தெரிந்தன. வாய் விட்டு தலைப்பை வாசித்தேன். "கோரக் கொலை! சிறு நிலத் தின் காரணமாக வாய்ச்சண்டை வளர்ந்து வாழ்வை முடித்துக் கொண்ட அதிசயம்" என்றிருந்தது.

அறியாமை காரணமாக அழித்தொழித்துக் கொண்ட மக்களுக்காக அனுதாபப் பட்டுக்கொண்டிருந்தேன். அப் பொழுது சிரிப்பொலி கேட்டது. சுற்றிலும் பார்த்தேன்; யாரையும் காணவில்லை. ஆனால் அந்தக் குரல் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. எப்படி?......

"மழையின்மையின் காரணமாக வயல்கள் எல்லாம் வறண்டு வெடித்துப்பாழ் நிலமாகக் கிடக்கின்றன. அதனால் சிறிதும் பய னில்லை. அந்த நிலையிலே கூட இந்த மக்களுக்கு நிலத்தாசை

விடவில்லை. வரப்பைப் பெயர்த்து ஒரு அடி தள்ளி அடுத்தவன் நிலத்தில் வரப்பிடுகிறுன். ஏன்?... பின்னுல் எப்பொழுதோ ஒரு காலத்தில் மழை பெய்து விளையும்போது அதிக விளைவைப் பெற்றுச் சுகமடைவதற்கு! வரப்பைத் தள்ளிப்போடத் தெரிந்தவனுக்கு சினத்தைத் தள்ளிப்போடத் தெரியவில்லை· சுகமாக வாழ வரப்பைப் பெயர்த்தான் ஆனுல் வாழ்ந்தானு?......

ஆறறிவு படைத்த மனிதனே அதிசயப் பிராணியாக இருக்கிறுனே! அவனுக்கே தெரியாதபொழுது ஐயறிவு படைத்த விலங்குகளும், பூச்சிகளும் உயிர்வாழ அவசியமான உணவிற்காகக் கொன்று கொள்வதைப்பற்றி வருந்துகிறுயே உனக்கு வெட்கமாக இல்லையா? என்று அந்தக்குரல் பலமாக நகைத்தது.

உச்சி மேட்டில் ஒலிவந்த திசையை நோக்கினேன். யாரையும் காணவில்லை. அந்த சிலந்தி தன் வலையின் நடுவில் இருந்தவாறு மேலும் கீழுமாக ஆடிக்கொண்டிருந்தது. ஆம்! அந்தச் சிலந்திதான் சிரித்துப்பேசி இருக்கவேண்டும். அதைத் தவிர வேறு ஒருவரும்தான் இல்லையே.

நான் வெட்கிப்போனேன். "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை" என்ற குறள் மருந்தை நாடிக்குணமடையாமல் மக்கள் குத்திக்கொண்டு சாகிறுர்களே என்றுதான்.